Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 49 of 2025

## Deposition of P.W.7 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சதிஷ்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் நாமக்கல் ரோடு, காலணித் தெருவில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜை தெரியும். ஆஜர் எதிரி விஜயகுமாரை தெரியும். அவர் இறந்து போனவரின் அண்ணன் மகன். 2 வருடத்திற்கு இரவு 10 , 10.30 மணிக்கு இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜ் வீட்டின் அருகே ராசிபுரம் காவல் ஆய்வாளர் விசாரித்து கொண்டிருந்தார். சத்தம் கேட்டு எங்கள் வீட்டிலிருந்து நான் போய் பார்க்க போனேன். வீட்டிற்குள்ளே சென்று பார்த்துவிட்டு வெளியே வந்து என்னிடம் சாட்சி கையெழுத்து போட வேண்டும் என்று சொன்னார்கள். நான் வந்து பார்த்து சென்றதற்காக கையெழுத்து போட சொல்வதாக சொன்னார்கள். எழுதாத 2 வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். என் முன்னிலையில் காவல் ஆய்வாளர் வழக்கு சொத்து எதையும் கைப்பற்றவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அவை முறையே அ.சா.ஆ2 மற்றும் அ.சா.ஆ.3 ஆகும்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், நான் விசாரணையில் 12.05.2023ம் தேதி இரவு 10 மணியளவில் சேட்டு என்கிற தங்கராஜ் குத்தி கொலை செய்யப்பட்ட தகவல் தெரிந்து 13.05.2023ம் தேதி அதிகாலை 2 மணிக்கு விசாரிப்பதற்காக சேட்டு என்கிற தங்கராஜ் வீட்டிற்கு சென்றபோது அங்கு ராசிபுரம் காவல் ஆய்வாளர் என்னையும் அங்கிருந்த எனது அப்பா கந்தசாமியையும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக இருக்கும்படி கேட்டு கொண்டார் என்றும், அந்த இடத்தில் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் மின் விளக்கு மற்றும் போலீஸ் சர்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நானும், என் அப்பா கந்தசாமியும் சாட்சியாக கையெழுத்து போட்டோம் என்றும், பின்பு அதிகாலை 3.30 மணிக்கு சம்பவ இடத்தில் தோய்திருந்த ரத்தத்தை 2 காட்டன் துணிகளில் சேகரித்தும் அதனுடன் மாதிரி காட்டன் துணி ஒன்றையும் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அதிலும் நானும் என் அப்பாவும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி விஜயகுமார் எனக்கு தெரிந்தவர் மற்றும் எனது ஜாதியை சேர்ந்தவர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.8 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கந்தசாமி | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது ராசிபுரம் நாமக்கல் ரோடு, காலணித்தெருவில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜை தெரியும். ஆஜர் எதிரி விஜயகுமாரை தெரியும். அவர் இறந்துபோனவரின் அண்ணன் மகன். சம்பவதன்று இரவு 11.30 மணிக்கு சத்தம் கேட்டு இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜ் வீட்டின் அருகே சென்றேன். அப்போது அடிப்பட்டு இருந்த சேட்டு என்கிற தங்கராஜை ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனார்கள். பின்பு ராசிபுரம் காவல் ஆய்வாளர் வந்து விசாரித்து கொண்டிருந்தார். வீட்டிற்குள்ளே சென்று பார்த்துவிட்டு வெளியே வந்து என்னிடம் சாட்சி கையெழுத்து போட வேண்டும் என்று சொன்னார்கள். நான் வந்து பார்த்து சென்றதற்காக கையெழுத்து போட சொல்வதாக சொன்னார்கள். என்னிடம் 2 கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. போலீசாரும் எனக்கு படித்து காட்டவில்லை. என் முன்னிலையில் காவல் ஆய்வாளர் வழக்கு சொத்து எதையும் கைப்பற்றவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அவை முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆகும்.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை **:**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், நான் விசாரணையில் 12.05.2023.ம் தேதி இரவு 10 மணியளவில் சேட்டு என்கிற தங்கராஜ் குத்தி கொலை செய்யப்பட்ட தகவல் தெரிந்து 13.05.2023ம் தேதி அதிகாலை 2 மணிக்கு விசாரிப்பதற்காக சேட்டு என்கிற தங்கராஜ் வீட்டிற்கு சென்றபோது அங்கு ராசிபுரம் காவல் ஆய்வாளர் என்னையும் அங்கிருந்த எனது மகன் சதிஷ்குமார் ஆகியோரிடம் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக இருக்கும்படி கேட்டு கொண்டார் என்றும், அந்த இடத்தில் எங்கள் முன்னிலையில் காவல்ஆய்வாளர் மின் விளக்கு மற்றும் போலீஸ் சர்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நானும், என் மகன் சதிஷ்குமாரும் சாட்சியாக கையெழுத்து போட்டோம் என்றும், பின்பு அதிகாலை 3.30 மணிக்கு சம்பவ இடத்தில் தோய்திருந்த ரத்தத்தை 2 காட்டன் துணிகளில் சேகரித்தும் அதனுடன் மாதிரி காட்டன் துணி ஒன்றையும் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அதிலும் நானும் என் மகனும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி விஜயகுமார் எனக்கு தெரிந்தவர் மற்றும் எனது ஜாதியை சேர்ந்தவர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**:** இல்லை.